5

# போதியோ பொன்னியம்மா

பொன்னியம்மா நீயிறந்து போனாய்; புதைப்பதற்கும்
உன்னிக் கருமங்கள் ஊரார் புரிகின்றார்,
செல்வக் குடும்பத்தின் சீமாட்டி என்றுலகம்
சொல்லும் படியாய்ச் சுகத்தோடும் வாழ்ந்தவளே,
காலத்தின் போக்கில் கலாம் விளைந்த காரணத்தால்,
கோலம் குலைந்து குளிரில் கிடப்பவளே!
சாம் பொழுதில்... நீ, மிகவும் சாந்தி நிறைந்தவளாய்
சூம்பும் கரங்களினைக் கூப்பினையோ! கோப்பியெனும்
பானம், உனக்குப் பலகால மாய் விருப்பம்
ஆனதுவே. அம்மா அதையே நினைந்தனையோ!

"ஆறாண்டாய் எங்கள் அரசின் பெருங்கருணைப்
பேராறு, தந்தபிச்சைக் காசை நிறுத்துவதே
எங்கள் பொருள் வளத்தை ஏற்ற வழியென்ற
தங்கருத்தை, எம்மூர்த் தலைவர், அரசினர்க்குப்
புள்ளி விபரப் பொழிப்போடு காட்டியதால்
தள்ளினார் என்னுடைய தாபரிப்புக் காசினையும்"

என்றாய். உனதுபசி எவ்வளவு என்பதையும்,
ஒன்றும் உறவு முறைகளுத வாததையும்,
பாரிச வாதம் படுக்கையிலே போட்டதையும்,
தூரத்துப் பார்வை தொலைந்ததையும், ஒவ்வொன்றாய்க்
காட்டிப் பிறகுமந்தக் காசைத் தரும்படியாய்க்
கேட்டு, மிகமன்றாட்டம் கேட்டு "முறைப்பாடு
வன்னிய னார்க்கு வரைந்து தா தம்பி" யென்றாய்.
என்னவோ பாவம் எழுதி யனுப்பிவைத்தோம்.

'எம்பீ' யைக் கண்டு எடுபிடியாய் வேலைசெய்தால்
சம்மதம் கூட வரலாம்! அதற்குள்ளே
என்ன அவசரமோ பொன்னியம்மா, நாம் எழுதி
ஒன்பதுவே ஆண்டு! இன்னும் ஓராண்டு காத்திருக்க
ஒண்ணாமல், எங்களது ஊராரை ஏய்த்து விட்டுக்
கண்மூடிக் கொண்டதென்ன! பொன்னியம்மா!
போம் பொழுதில்

என்ன நினைந்தாய் உன் இறுதிச் சுடர் மூச்சில்?
பொன்னியம்மா போய்வருக!.... போதியோ! என்றிரங்கும்
ஊரோடு, வானும் உருகி, அழுதரற்றும்
மார்கழி மாத மழை!

*- நீலாவணன் -*
*'ஒத்திகை'*



இலவச விநியோகத்திற்காக